Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO.CC.78/2020**

**Prosecution witness – PW – 6**

| | | | | |
|---|---|---|---|---|
| **Date** | : | 07.08.2025 | **Calling** : | |
| **Name** | : | திரு.எஸ்.சசிகுமார். | **Religion** : | |
| **Father/Husband Name** | : | திரு.சீனுவாசன். | **Age** : | 49 |
| **Village/City** | : | | **Caste** : | |
| **Taluka.** | : | . | | |

(எதிரிகள் ஆஜர்)

<u>முதல் விசாரணை.</u>

**1.**நான் தற்பொழுது ஒலக்கூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். 28.05.2020 அன்று பிரம்மதேசம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபொழுது பிரம்மதேசம் காவல்நிலைய குற்ற எண்.419/2020, பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC–ன் படி வழக்கு பதிவு செய்ததை எனது பார்வைக்கு வைத்ததை அன்றைய தினமே பகல் 14.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான முன்னூர் கிராமம், மேட்டுத் தெருவில் உள்ள சக்திவேல் வீட்டின் எதிரே சம்பவயிடம் சென்று ஆஜர் சாட்சிகள் 1.கோபால், 2.வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களை விசாரணை செய்தேன். **பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு பகல் 15.30 மணிக்கு சம்பவயிடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சுமார் 65 செ.மீ நீளமும், சுமார் 2 செ.மீ அகலமும் கொண்ட இரும்பு ராடு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் சக்திவேல், லோகநாயகி, சக்திவேல் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**2.** சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் எனது இரகசிய விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றபோது எதிரிகள் ஆலங்குப்பம் பேருந்து நிறுத்தம் அருகில அன்றைய தினமே சாட்சிகள் அடையாளம் காட்ட 17.30 மணிக்கு எதிரி சங்கர், வயது 39, த/பெ.மஞ்சினிகவுண்டர் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், கைதின்போது கைது பற்றி தகவலை அவருடைய உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும், கைதின்போது உச்சநீதிமன்ற கட்டளைகளை முறையாக நிறைவேற்றியும் பின்னர் 18.15 மணிக்கு நிலையம்வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவசம் ஒப்புவித்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

**3.** பின்னர் 04.08.2020 அன்று காயப்பட்ட சக்திவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சாண்று வழங்கிய திண்டிவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் இளங்கோ என்பவரை விசாரித்து காயச்சான்றிதலும் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் அன்றைய தினமே பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC –யிலிருந்து 294(b), 323, 506(2), 326 IPC ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரி 1–ன் மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC படியும், எதிரி 2–ன் மீது பிரிவுகள் 294(b), 323, 506(2) IPC படியும் மற்றும் எதிரிகள் 3, 4 –ன் மீது பிரிவுகள் 294(b) IPC படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u> –இல்லை**

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.